**100 % வாக்களிக்க உறுதி செய்வோம்!**
**ENSURE 100% VOTING!**

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண்.26** **நாள்: 17.04.2019**

**சென்னை மாவட்டத்தில் 3 பாராளுமன்ற தொகுதிகள் மற்றும் பெரம்பூர் சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் முன்னேற்பாடுகள் அனைத்தும் நிறைவுபெற்று வாக்குப்பதிவுக்கு தயார்நிலையில் உள்ளது !**

**ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தேவையான பொருட்களை காவல்துறை பாதுகாப்புடன் அனுப்பும் பணியை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்களும் பார்வையிட்டனர் !!**

------

2019 பாராளுமன்ற பொதுத்தேர்தல் மற்றும் பெரம்பூர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நாளை (18.04.2019) நடைபெறுவதை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவிகள், VVPAT இயந்திரங்கள் மற்றும் தேவையான பிற பொருட்களை காவல்துறை பாதுகாப்புடன் அனுப்பும் பணியை மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்களும் இன்று (17.04.2019) இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செயின்ட் பீட்டர்ஸ் பள்ளியில் பார்வையிட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததாவது: சென்னை மாவட்டத்தில் நாளை (18.04.2019) பாராளுமன்ற பொதுத்தேர்தல் மற்றும் பெரம்பூர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடத்துவதற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் 100 சதவீதம் செய்து முடிக்கப்பட்டு, வாக்குப்பதிவிற்கு தயார்நிலையில் உள்ளது. 3,754 வாக்குச்சாவடிகள் மற்றும் 7 துணை வாக்குச்சாவடிகளில் பணியாற்றும் அலுவலர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு வாக்குச்சாவடிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இன்று காலை முதல் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் 27 வகையான வாக்குப்பதிவிற்கு தேவையான பொருட்கள் அனைத்தும் காவல்துறை பாதுகாப்புடன் வாகனங்களில் அனுப்பப்பட்டு வாக்குச்சாவடிகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இன்று மாலை வாக்குச்சாவடி அலுவலர்கள் வாக்குப்பதிவு நடைபெறும் அறையை தயார்நிலைப்படுத்தி நாளை காலை 6 மணிக்கு வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் மாதிரி வாக்குப்பதிவு நடத்துவார்கள். பின்னர், காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும்.

அனைத்து வாக்குப்பதிவு மையங்களிலும் வாக்காளர்கள் எந்த சின்னத்திற்கு வாக்களித்தோம் என்பதை உறுதி செய்து கொள்ள வசதியாக வாக்காளர் சரிபார்ப்பு காகித தணிக்கை இயந்திரங்கள் (VVPAT) பயன்படுத்தப்படுகிறது. தேர்தல் பணியில் 20,102 அரசு ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். அனைத்து வாக்குச்சாவடிகளையும் கண்காணிக்க 331 நுண் பார்வையாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியவர்கள் வாக்களிக்க வசதியாக சாய்வுதளம் வசதி,

சக்கர நாற்காலி, கழிவறை, குடிநீர் வசதி, சாமியானா பந்தல் வசதி, இருக்கை வசதி ஆகியவை செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் மகளிர் வாக்களிக்க தனி வாக்குச்சாவடி ஒன்றும், மாதிரி வாக்குச்சாவடி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. 1983 வாக்குச்சாவடிகள் வெப் கேமரா மூலம் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

சென்னை மாநகர காவல் ஆணையாளர் அவர்கள் தெரிவித்ததாவது : நாளை வாக்குப்பதிவு தினத்தன்று மூன்று வகையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வாக்குச்சாவடியில் தேர்தல் அமைதியாக நடைபெறும் வகையில் காவல்துறை மற்றும் துணை இராணுவத்தினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மண்டல அளவில் நடமாடும் வாகனங்கள் மூலம் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நகரம் முழுவதும் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் காவல்துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள். பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்க ஏதுவாக சென்னை மாநகர காவல்துறையின் சார்பாக 15,000 காவலர்களும், 5 கம்பெனி மத்திய தொழில் பாதுகாப்பு படையினரும், இரண்டு கம்பெனி ஆந்திர மாநில காவல்துறையினரும், இரண்டு கம்பெனி தமிழ்நாடு சிறப்பு காவல் படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வடசென்னை பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**